25

உறுப்பினர் செயலர் (பொ), சேலம் உள்ளூர் திட்டக் குழுமம், சேலம்

அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை. திரு. அ. விஜயன், பி.இ.,

---

<u>ந.க.எண். 178/2018 சேஉ திரு</u> <u>நாள். 31. 07.2018.</u>

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம், 2017- சேலம் மாவட்டம்/வட்டம், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கெஜ்ஜல்நாய்க்கன்பட்டி ஊராட்சி/கிராமம், ச.எண்.17/1பா– 1.38 ஏக்கர் (5584.66 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 04.05.2017
2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017
3. அரசாணை (நிலை) எண். 55 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 02.05.2018.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறை ந.க.எண். 13193/2017/LA2 நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
5. மனுதாரர் திரு.மதன்லால் டி. சாவ்லா, சேலம் அவர்களின் ஆன்லைன் விண்ணப்பம் நாள். 22.01.2018

****************

<u>உத்தரவு:</u>

பார்வை 1, 2 மற்றும் 3–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 4–ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை 5ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

சேலம் மாவட்டம்/ வட்டம், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கெஜ்ஜல்நாய்க்கன்பட்டி ஊராட்சி/கிராமம், ச.எண்.17/1பா– 1.38 ஏக்கர் (5584.66 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அண்ணாமலை கார்டன் என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **<u>ம.வ(வரன்முறை)/சேஉ திரு எண்.110/2018</u>** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

..2..

Madanlal

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : 1.38 ஏக்கர் (5584.66 ச.மீ) |
| மொத்த மனைகள் | : 20 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : 11 |
| விற்கப்பட்ட மனை எண்கள். | : 1 to 7, 9 to 12 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : 09 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : 8, 13 to 20 |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு | : 1684.49 ச.மீ |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு பூங்கா (மனை எண்கள்.8) | : 183.01 ச.மீ **(10.86%)** |

செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்

1) பரிசீலனை கட்டணம் :

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | மனை ஒன்றிற்கு ரூ.500/–வீதம் 9 மனைகளுக்கு ரூ.4,500/- செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனை கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் :

| மனை எண். | பரப்பளவு (சமீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30/– ரூபாய் வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய்.25/– வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| வரைபடத்தில் கண்டுள்ள OSR இடங்களை தவிர்த்து இதர மனைகளுக்கு அரசாணையின்படி உரிய கட்டணங்களை பெற்றுக்கொண்டு வன்முறைப்படுத்த தெரிவிக்கப்படுகிறது. | | | |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு :

| | |
|---|---|
| HOD-CODE 26-02<br>0217 Urban Development-60 Other Urban Development Schemes –<br>800 Other Receipts AT Receipts under Regularisation charges of unapproved Layouts and plots – DTCP<br>(DPC : 0217 60 800 AT 0007) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017–ல் விதி எண்.7(g)(ii)–ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொ),
சேலம் உள்ளூர் திட்டக் குழுமம், சேலம்.

31/07/2018 31/07/18

<u>இணைப்பு</u>
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

<u>பெறுநர்,</u>
வட்டார வளர்ச்சி அலுவலர் / தனி அலுவலர்,
பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம்,
கெஜ்ஜல்நாய்க்கன்பட்டி ஊராட்சி,
சேலம்.

<u>நகல்</u>

1. திரு.மதன்லால் டி. சாவ்லா,
15C, வித்யாலயா ரோடு,
ராமகிருஷ்ணா பார்க் அருகில்,
சேலம்–636 007.

2. உதவி இயக்குநர் (நில அளவை), மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம், சேலம். — சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு

3. சார்பதிவாளர், தாதகாப்பட்டி, சேலம். — சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.

ஊராட்சி ஒன்றியம்
பனமரத்துப்பட்டி.

ந. க. எண்.2948 /2017/ தி3

நாள். 29.10.2019.

பொருள்: மனை பிரிவுகள் வரன்முறைப்படுத்துதல் – சேலம் மாவட்டம் – பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம் – கெஜ்ஜல்நாயக்கன்பட்டி கிராம ஊராட்சி சர்வே எண்:17/1பகுதி 1.38 ஏக்கர் (5584.66 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்ட அனுமதியற்ற மனைபிரிவு – வரைமுறைபடுத்துதல் – உரிய கட்டணங்களான வரன்முறை கட்டணம், வளர்ச்சி கட்டணம் – அரசு தலைப்பு மற்றும் கிராம ஊராட்சி தனி அலுவலர் வங்கி கணக்கில் செலுத்த தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண்: 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்திட்டம் (ந.வ.4(30) நாள் . 13.10.2017
2. உறுப்பினர் செயலர்(பொ) சேலம் உள்ளூர் திட்ட குழுமம், சேலம் அவர்களின் உத்தரவு ந.க.எண்.178/2018/ சே.உ.தி.கு நாள்.31.07.2018.
3. தான பத்திரம், நாள் :28.06.2019.

/0/0/0/

பார்வை – 1 ல் காணும் அரசாணையின்படி, உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனுமதியற்ற மனைபிரிவுகளை வரன்முறைபடுத்துவதற்கு உரிய நிபந்தனைகளின் அடிப்படையிலும், உரிய கட்டணங்களை அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் செலுத்திவிட்டு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் வரன்முறைபடுத்திக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பார்வை – 2 ல் காணும் உத்திரவில் சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம் கெஜ்ஜல்நாயக்கன்பட்டி ஊராட்சியில் சர்வே எண்:17/1பகுதி 1.38 ஏக்கர் (5584.66 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்ட **அண்ணாமலை கார்டன்** என்ற மனைபிரிவிற்கு உரிய கட்டணங்களை கீழ்கண்ட விபரப்படி அரசு தலைப்பு மற்றும் கிராம ஊராட்சிகளில் செலுத்திவிட்டு கொள்கை அளவிலான (In Principle Approval Layout Frame Work) குடியுருப்பு மனைபிரிவு வரைபடத்திற்கு அனுமதி வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசாணை –1 ல் தெரிவித்துள்ளவாறு சம்மந்தப்பட்ட மனைபிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு நிலத்தினை (OSR Land) பார்வை 3 ல் கண்ட விபரப்படி மனைபிரிவில் உள்ள சாலைகளை அப்போதைய கெஜ்ஜல்நாயக்கன்பட்டி ஊராட்சிமன்ற தலைவருக்கும், பொது ஒதுக்கீடு நிலத்தினை (OSR Land) பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களுக்கும் சேலம் மாவட்ட தாதகாபட்டி பத்திர பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தானபத்திரங்களை முறையே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே, கீழ்கண்ட விபரப்படி உள்ள **அண்ணாமலை கார்டன்** உள்ள 8 வீட்டு மனைபிரிவுகளுக்கு கலம் எண்.4ல் உள்ள தொகை ரூ.56,306/– (ரூபாய். ஐம்பத்தி ஆறாயிரத்து முன்நூற்றி ஆறு மட்டும்)யினை கீழ்காணும் அரசு தலைப்பில் கணக்கிலும் செலுத்த மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

Madanan
18.6.2020

0217 Urban Development
60 Other Urban Development Schemes
800 Other Receipts
AT Receipts under Regularisation charges of unapproved Layouts and plots-DTCP
(DPC:0217 60 800 AT 0007)

மேலும் கலம் எண்.5ல் உள்ள தொகை ரூ.37,539/– (ரூபாய். முப்பத்தி ஏழாயிரத்து ஐந்து நூற்றி முப்பத்தி ஒன்பது மட்டும்) யினை கெஜ்ஜல்நாயக்கன்பட்டி கிராம ஊராட்சி தனி அலுவலர் வங்கி கணக்கு எண்.6600760466 (இந்தியன் வங்கி சீலநாய்கன்பட்டி கிளை) யில் செலுத்த மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | மனை எண் | பரப்பளவு (ச.மீ) | அரசு தலைப்பில் செலுத்தப்பட வேண்டிய வரன்முறை கட்டணம் (ரூ.37.50/- ச.மீ.) | ஊராட்சி கணக்கில் செலுத்தப்பட வேண்டிய வளர்ச்சி கட்டணம் (ரூ.25/- ச.மீ.) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | 13 | 195.10 | 7316 | 4878 |
| 2 | 14 | 191.38 | 7177 | 4785 |
| 3 | 15 | 187.66 | 7037 | 4692 |
| 4 | 16 | 183.95 | 6898 | 4599 |
| 5 | 17 | 180.23 | 6759 | 4506 |
| 6 | 18 | 176.52 | 6620 | 4413 |
| 7 | 19 | 172.80 | 6480 | 4320 |
| 8 | 20 | 213.83 | 8019 | 5346 |
| மொத்தம் | | 1501.47 | 56306 | 37539 |

மேற்காணும் தொகையினை முறையே அரசு தலைப்பு மற்றும் கெஜ்ஜல்நாயக்கன்பட்டி கிராம ஊராட்சி தனி அலுவலர் வங்கி கணக்கில் செலுத்த மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

29/10/19

தனிஅலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
கெஜ்ஜல்நாயக்கன்பட்டி ஊராட்சி,
பனமரத்துபட்டி.

29/10/19

பெறுதல்: திரு.மதன்லால் டி.சாவ்லா,
15C, வித்யாலயா ரோடு, ராமகிருஷ்ணா பார்க் அருகில்,
சேலம் மாவட்டம் – 636 007.

நகல்:
ஊராட்சி செயலர், கெஜ்ஜல்நாயக்கன்பட்டி ஊராட்சிமன்றம், (உரிய கட்டணம் பெற்று ஊராட்சி தனி அலுவலர் வங்கி கணக்கில் செலுத்தப்பட வேண்டியது).

18.6.2020